

புரட்சிப் பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2050 | ஏப்ரல் 04, 2019 | புரட்சி 18 | முழக்கம் 12 | விலை: ரூ.3.00


# இயக்குநர்கள் – படைப்பாளிகள் 103 பேர் கூட்டறிக்கை

# தேசபக்தியைத் துருப்புச் சீட்டாக்கி வரும் பா.ஜ.க.வைத் தோற்கடிப்பீர்!

நாட்டின் ஜனநாயகத்தைப் பாதுகாக்க வேண்டுமானால், மக்களவைத் தேர்தலில் தயவுசெய்து பா.ஜ.க.வுக்கு வாக்களிக்காதீர்கள் என்று, இந்தியாவின் புகழ்பெற்ற திரைப்பட இயக்கநர்கள், படைப்பாளிகள், 103 பேர் நாட்டு மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

பிரிவினைவாத மற்றும் வெறுப்பரசியலை வளர்த்தெடுப்பது, தலித்துகள் மற்றும் முஸ்லிம்களை தனிமைப்படுத்துவது, விவசாயிகளைக் கண்டு கொள்ளாதது, நாட்டையே சில பெரும் முதலாளிகள் கையில் ஒப்படைத்தது, கலாச்சார மற்றும் விஞ்ஞான நிறுவனங்களை ஒழிப்பது, கருத்துச் சுதந்திரத்தைப் பறிக்கும் வகையில் தணிக்கை கட்டுப்பாடுகளை இறுக்குவது, பொய்யான தகவல்களைப் பரப்புவது போன்ற பாஜகவின் நடவடிக்கைகள் நாட்டை மிக மோசமான ஆபத்தை நோக்கி கொண்டு சென்றுவிடும் என்றும் அவர்கள் கூறியுள்ளனர். ஆனந்த் பட்வர்தன், குர்விந்தர் சிங், கபீர் சிங் சவுத்ரி, சனல்குமார் சசிதரன், ஆஷிக் அபு, வெற்றி மாறன், ரஞ்சித், கோபி நயினார், லீனா மணி மேகலை, திவ்யபாரதி, அஜயன் பாலா உள்ளிட்டோர் கையெழுத்திட்டு www.artistuniteindia.com என்ற இணைய தளத்தில் வெளியிட்டுள்ள அறிக்கையில், இது தொடர்பாக மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

“நம் நாட்டுக்கு சோதனையான நேரம் இது. நாம் வேற்றுமையில் ஒற்றுமை காண்பவர்கள். இந்த நாட்டின் குடிகளாக இருப்பது சிறப்பான உணர்வு. ஆனால், தற்போது அந்த உணர்வு ஆபத்தில் உள்ளது. மக்களவைத் தேர்தலில் நாம் புத்திசாலித்தனமாக வாக்களிக்கவில்லை என்றால் பாசிசம் நம்மைக் கடுமையாகத் தாக்கும் ஆபத்து காத்திருக்கிறது. 2014ஆம் ஆண்டு பாஜக ஆட்சிக்கு வந்ததில் இருந்து அனைத்தும் மோசமாக மாறிக் கொண்டிருக்கின்றன. பாஜக மற்றும் அதன் கூட்டணி கட்சிகள் தேர்தல் நேரத்தில் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற வில்லை. அதனை மறைக்க பசு பாதுகாப்பு வன்முறைகளையும் கும்பல் மனோபாவங்களையும் வளர்த்து நாட்டை பிளவுபடுத்தும் முயற்சிகளில் இறங்கியுள்ளது.

இன்டர்நெட், சமூக வலைதளங்கள் மூலம் வெறுப்பைத் தூண்டிவிடும்படி பிரச்சாரம் செய்கிறது. தேசபக்தி பெயரில்தான் தனது வாக்கு வங்கியை பா.ஜ.க. வலுப்படுத்துகிறது. யாராவது லேசாக அதிருப்தி தெரிவித்தாலும் தேசத் துரோகி என்கிறார்கள். தேச பக்தியை ட்ரம்ப் கார்டாக பயன்படுத்தி தங்கள் வாக்கு வங்கியை வளர்த்துக் கொள்கின்றனர். இராணுவ நடவடிக்கைகளைக்கூட தங்கள் தேர்தல் உத்தியாகப் பயன்படுத்தி, நாட்டை போரில் ஈடுபடுத்தும் சூழலை உருவாக்கும் அளவிற்கு இது வளர்ந்துள்ளது. இவர்களை அஞ்சாமல் எதிர்த்து நின்றதற்காக கொல்லப்பட்ட புகழ்பெற்ற எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள், ஊடக நண்பர்களை மறந்து விட வேண்டாம்.

பெருமுதலாளிகளின் அரசியல் இலாபத் திற்காக பாதுகாப்புப் படையினரின் உயிரைப் பணயம் வைக்கிறார்கள். படங்கள், புத்தகங்களைத் தடை செய்தும், தணிக்கை செய்தும் மக்களிடம் உண்மை சென்றடை யாமல் பார்த்துக் கொள்கிறார்கள். விவசாயிகளை மொத்தமாக மறந்து விட்டார்கள். இந்தியாவை சில பெரு முதலாளிகளின் ‘போர்டு ரூம்’ ஆக்கிவிட்டது பாஜக. மோசமான பொருளாதாரக் கொள்கைகளால், நாட்டிற்குப் பாதிப்பு ஏற்பட்டும்கூட அந்த கொள்கைகள் வெற்றி பெற்றது போன்று காட்டுகின்றனர். இவையெல்லாம் அவர்களின் பொய்ப் பிரச்சாரத்தினாலேயே சாத்தியமாகியுள்ளது.

அவர்களுக்கு இன்னொரு முறை வாய்ப்பு கொடுப்பது ஆபத்தான தவறாகிவிடும். அது உலகின் மிகப் பெரிய ஜனநாயகத்தின் சவப் பெட்டியில் அடிக்கப்படும் கடைசி ஆணியாகிவிடும்.

எனவே உங்களால் முடிந்த அத்தனையை யும் செய்து இந்த ஆபத்தான ஆட்சி மீண்டும் தொடராமல் தடுக்குமாறும், நம் நாட்டின் அரசியலமைப்பு சட்டத்தை மதிக்கும், பேச்சு எழுத்து சுதந்திரத்தை உறுதி செய்யும். தணிக்கைகள் அடக்குமுறைகளுக்கு எதிரான ஒரு அரசைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறோம். இதுதான் நமக்குக் கிடைத்த கடைசி வாய்ப்பு.” இவ்வாறு இயக்குநர்கள் தெரிவித்துள்ளனர்.

## பெரியார் – காந்தி சிலைகளுக்கு மாலை போட்டதற்காகவே கைது செய்ததை மறக்க முடியுமா?

- சங்பரிவாரங்கள் நடத்திய ‘ராம ரதயாத்திரை’க்கு தமிழ்நாட்டில் காவல் துறை பாதுகாப்புடன் அனுமதி வழங்கியது எடப்பாடி ஆட்சி. தமிழ்நாட்டை மதக் கலவரமாக்கும் இந்த யாத்திரையை அனுமதிக்கக் கூடாது என்று மதவெறி எதிர்ப்புக் கூட்டு இயக்கத்தின் வேண்டுகோளைப் புறந்தள்ளி எதிர்ப்பு தெரிவித்த பல்லாயிரக்கணக்கான தோழர்களை கைது செய்தது எடப்பாடி அ.இ.அ.தி.மு.க. ஆட்சி.
- முள்ளி வாய்க்கால் இனப்படுகொலைக்குள்ளான ஈழத் தமிழர்களுக்கு வீர வணக்கம் செலுத்த சென்னை மெரினா கடற்கரையில் திரண்ட இளைஞர்களைக் கைது செய்து 17 முன்னணித் தோழர்களை ‘ரிமாண்ட்’ செய்ததும் எடப்பாடி ஆட்சி தான். இவர்கள் தான் இப்போது ஈழத் தமிழர் பிரச்சினையின் ஆதரவாளர்களைப்போல் தேர்தல் பரப்புரைக் கூட்டங்களில் பேசி வருகிறார்கள்.
- அதே முள்ளிவாய்க்கால் வீரவணக்க நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்த திருமுருகன் காந்தி (மே 17), இளமாறன் மற்றும் டைசன் (தமிழர் விடியல் கட்சி) ஆகிய தோழர்களைக் குண்டர் சட்டத்தில் கைது செய்து சிறையிலடைத்து பா.ஜ.க. எஜமானர்களிடம் தனது “பக்தி விசுவாசத்தை”க் காட்டியதும் இதே எடப்பாடி ஆட்சிதான்.
- பல மாத சிறைவாசத்துக்குப் பிறகு நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்ட இந்தத் தோழர்கள் சென்னை இராயப்பேட்டை திராவிடர் விடுதலைக் கழக அலுவலக வாயிலில் உள்ள பெரியார் சிலைக்கு மாலை போட்டதற்காக வழக்கு போட்டதும் இதே எடப்பாடி ஆட்சி தான். மாலை போடும் நிகழ்வில் பங்கேற்ற திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்கள் மீதும் வழக்கு பாய்ந்தது.
- கருநாடகத்தில் இந்துத்துவ எதிர்ப்பாளரான கவுரி லங்கேஷ் , மதவெறியர்களின் துப்பாக்கிக் குண்டுக்கு பலியானதைத் தொடர்ந்து காந்தி மீது பாய்ந்த அதே குண்டுதான் கவுரி லங்கேஷ் மீதும் பாயந்தது என்ற முழக்கத்துடன் அக்.2ஆம் தேதி தேசத் தந்தை காந்தி பிறந்த நாளில் மெரினாவில் காந்தி சிலைக்கு மாலை போட வந்த எழுத்தாளர்கள், சிந்தனையாளர்களைக் கைது செய்து சிறையில் அடைத்தது எடப்பாடி ஆட்சி. பெரியாரும் காந்தியும் ‘சங்கிகளுக்கு’ எதிரிகள் என்றால், எங்களுக்கும் எதிரிகள்தான் என்று அடையாளம் காட்டிய வெட்கக்கேடு அல்லவா, இது?
- திரிபுராவில் லெனின் சிலையை காவிக் கும்பல் உடைத்தபோது தமிழ்நாட்டில் பெரியார் சிலைகளையும் உடைக்க வேண்டும் என்று திமிருடன் தனது முகநூலில் பதிவிட்டவர் பார்ப்பனர் எச். ராஜா. தமிழகமே கொந்தளித்தது. ஆனால் பார்ப்பன ராஜாவை பாதுகாத்தது எடப்பாடி ஆட்சி. சட்டம் அவரிடம் நெருங்கவே இல்லை. ராஜாவுக்கு எதிராக ஒரு கண்டனத்தைக்கூட தமிழக அரசு சார்பில் தெரிவிக்கவில்லை. பா.ஜ.க. தலைவரான தமிழிசையும் பொன். இராதாகிருஷ்ணனும்கூட ராஜாவின் கருத்து கட்சிக் கருத்து அல்ல என்று கூறிய நிலையிலும் எடப்பாடி ஆட்சி வாய்மூடி மவுனமே சாதித்தது.
- பெண் ஊடகவியலாளர்கள் அனைவருமே ஒழுக்கக் கேடானவர்கள் என்று முகநூலில் பதிவிட்ட பா.ஜ.க. பார்ப்பனர் எஸ்.வி. சேகருக்கு எதிராக ஊடகவியலாளர்கள் போராடினார்கள். சென்னை உயர்நீதிமன்றம் அவரது முன்பிணை கேட்ட மனுவைத் தள்ளுபடி செய்தது. அதற்குப் பிறகும் தமிழக காவல்துறை அவருக்குப் பாதுகாப்பு வழங்கியதே தவிர கைது செய்ய எந்த நடவடிக்கையும் எடுத்திடவில்லை.
- துணை முதல்வராக இருக்கும் ஓ. பன்னீர்செல்வம், டெல்லியில் பாதுகாப்புத் துறை அமைச்சசராக இருந்த நிர்மலா சீத்தாராமனை சந்திக்க அவரது அலுவலக வாயிலில் காத்துக் கிடந்த போதும் சந்திக்க மறுத்து அவமானப்படுத்தியவர் நிர்மலா சீத்தாராமன்.
- தமிழக அமைச்சர்கள் அடுத்தவர் காலில் விழுந்து வணங்கும் ஆண்மையற்றவர்கள்; அதைத் தவிர வேறு ஏதும் அவர்களுக்கு தெரியாது என்று தமிழக ஆர்.எஸ்.எஸ். பெரும்புள்ளி பார்ப்பனர் குருமூர்த்தி வெளிப்படையாகவே பேசினார். அத்தனை அவமானங்களையும் அப்படியே துண்டைப் போட்டு துடைத்து எறிந்துவிட்டு மோடியே தேசத்தைப் பாதுகாக்கக் கூடிய ஒரே பிரதமர் என்று மேடைதோறும் முழங்குகிறார்கள்.

தன்மானத் தமிழர்கள் இதை ஒருபோதும் மறக்க மாட்டார்கள். தேர்தலில் பாடம் புகட்டத் தயாராகவே காத்திருக்கிறார்கள்.

## உலகப் பொருளாதார ஆய்வாளர்களுடன் கலந்து உருவாக்கப்பட்ட இராகுல்காந்தியின் ரூ. 72,000 உதவித் திட்டம்

வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ள 25 கோடி மக்களுக்கு ஆண்டுக்கு ரூ.72,000 உதவியாக வழங்கும் திட்டத்தை காங்கிரஸ் தலைவர் இராகுல்காந்தி அறிவித்திருக்கிறார். இது நிறைவேற்ற முடியாத திட்டம், அரசியலுக்கான அறிவிப்பு என்று பா.ஜ.க. விமர்சனம் செய்கிறது. முன்னாள் ரிசர்வ் வங்கி ஆளுநர் ரகுராம்ராஜன், இத்திட்டம் நிறைவேற்றக் கூடியதே என்று கூறுகிறார். இத்திட்டம் குறித்து காங்கிரஸ் கட்சி பல மாதங்களாகவே பொருளாதார நிபுணர்களுடன் ஆலோசனை நடத்தி வந்திருக்கிறது என்ற தகவல்கள் இப்போது வெளி வந்திருக்கின்றன.

உலகப் புகழ் பெற்ற பிரெஞ்சு நாட்டு பொருளாதார ஆய்வாளர் தாமஸ் பிக்கட்டி இத்திட்டத்தை உருவாக்குவதில் காங்கிரஸ் கட்சிக்குத் தாம் உதவியதாக இப்போது கூறியிருக்கிறார். ‘தி பிரிண்ட்’ இணைய தள பத்திரிகை, கடந்த புதன்கிழமை இந்த செய்தியைத் தனது இணையதளத்தில் வெளியிட்டுள்ளது. கடந்த ஜனவரி மாதத்திலிருந்தே இத் திட்டத்தை உருவாக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்திருக்கின்றன. பிக்கட்டி இத்திட்டத்துக்கு தனது அழுத்தமான ஆதரவை வெளிப்படுத்தியுள்ளதோடு இந்தியாவில் படித்த ஆளும் வர்க்கம் ஏழை மக்களை மிகவும் மோசமான நிலையிலேயே அழுத்தி வைத்திருக்கிறது என்றும் வேதனைப்பட்டுள்ளார்.

“இந்திய சமூகம் ஜாதிய மோதல்களிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு, பொருளாதார வளர்ச்சிக்கும் சொத்துகளை சமமாகப் பகிர்ந்து கொள்வதற்குமான பொருளாதாரத் திட்டங்களை நோக்கி நகர இதுவே சரியான தருணம்” என்று தாமஸ் பிக்கட்டி கூறியுள்ளார்.

பாரீஸ் பொருளாதார ஆய்வகத்தில் இப்போது பிக்கட்டி பேராசிரியராகப் பணியாற்றி வருகிறார். இத்திட்டம் குறித்து அமெரிக்காவின் மாசூசெட்டாஸ் தொழில்நுட்ப நிர்வாகத்தின் பேராசிரியர் அபிஜித் பேனர்ஜி அவர்களுடனும்காங்கிரஸ் கலந்து ஆலோசனை நடத்தியிருக்கிறது. “இத்திட்டத்துக்கான செலவு மதிப்பீடு; திட்டத்தை அமுல்படுத்தும் செயல் முறை குறித்து நாங்கள் இருவரும் காங்கிரஸ் தலைமைக்கு ஆலோசனைகள் வழங்கினோம்” என்று தாமஸ் பிக்கட்டி கூறியுள்ளார்.

## பி.எட். தேர்வு: ஒடுக்கப்பட்ட மாணவர்களுக்கு மாபெரும் அநீதி

பட்டதாரி ஆசிரியர் பயிற்சியான ‘பி.எட்.’ வகுப்பில் சேர்வதற்கான தகுதி தமிழ்நாட்டில் தற்போதுள்ள இடஒதுக்கீடு அடிப்படையில் பின்பற்றப்பட்டு வருகிறது. தமிழ்நாடு ஆசிரியர் தேர்வு வாரியம், ‘ஆசிரியருக்கான தேர்வு’க்கான மதிப்பெண் தகுதிகளை இப்போது திடீர் என மாற்றி அமைத்திருக்கிறது. திறந்த போட்டியினருக்கு 50 சதவீதம்; பிற்படுத்தப்பட்டோர், பிற்படுத்த முஸ்லிம்களுக்கு 45 சதவீதம்; மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு 43 சதவீதம்; பட்டியலினப் பிரிவு, அருந்ததியினருக்கு 40 சதவீதம் என்று மதிப்பெண்கள் நிர்ணயிக்கப்பட்டிருந்தன. கடந்த 5 ஆண்டுகளாக நடத்தப்பட்ட தேர்வுகளில் இந்த மதிப்பெண் முறையே பின்பற்றப்பட்டு வருகிறது. கடந்த மார்ச் 15ஆம் தேதி நடத்தப்பட்ட தேர்வில் ஆசிரியர் தேர்வு வாரியம் திடீரென்று அடிப்படை மதிப்பெண் தகுதியை முன்னறிவிப்பு ஏதுமின்றி விண்ணப்படிவங்களில் உயர்த்தி அறிவித்தது. பிற்படுத்தப் பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் பழங்குடிப் பிரிவு மாணவர்கள் குறைந்த மதிப்பெண் 45 சதவீதம் பெற்றிருக்க வேண்டும் என்ற திடீர் அறிவிப்பால் ஏற்கெனவே இந்த மதிப்பெண் அடிப்படையில் தேர்வுக்குத் தயாராகிக் கொண்டிருந்த மாணவர்கள் நிலைகுலைந்து நிற்கின்றனர்.

கல்வித் துறை ஏன் ஒடுக்கப்பட்ட மாணவர்கள் மீது இத்தகைய அதிரடித் தாக்குதலை நடத்துகிறது? இந்த 5 சதவீத மதிப்பெண் உயர்வுதான் அவர்களின் ஆசிரியர்களுக்கான தகுதியை நிலைநிறுத்தப் போகிறதா? நுழைவு தேர்வு வேறு வைக்கிறார்களே? சமூகநீதியின் மீது வெறுப்பு கொண்ட பார்ப்பனிய சிந்தனையில் ஊறிப் போயிருக்கும் அதிகார வர்க்கம் இப்படி ஒடுக்கப்பட்ட மாணவர்களின் எதிர்காலத்தோடு விளையாடிக் கொண்டிருக்கிறது. தமிழக கல்விஅமைச்சர் இதைப் பற்றியெல்லாம் சிந்திக்க மாட்டாரா?

## தமிழகத்தின் அவமானச் சின்னம் எச்.ராஜா – மு.க.ஸ்டாலின்

பெரியாரை அவமதிப்பு - மதப் பதட்டங்களை உருவாக்கும் வகையில் அடாவடித்தனமாக செயல்பட்டு வரும் எச். ராஜா, தமிழகத்தின் அவமானச் சின்னம் என்று தி.மு.க. தலைவர் மு.க. ஸ்டாலின் பேசியுள்ளார்.

கார்த்தி சிதம்பரத்தை எதிர்த்து நிற்கக்கூடிய வேட்பாளர் யார் என்பது உங்களுக்குத் தெரியும். அவருடைய வண்டவாளங்கள் அத்தனையும் நன்றாக அறிந்து வைத்திருக்கக் கூடியவர்கள் நீங்கள். எச்.ராஜா அவர்கள் ஆளுங்கட்சியின் துணையோடு பி.ஜே.பி-யின் வேட்பாளராக நிறுத்தப்பட்டு இருக்கின்றார். என்னைப் பொறுத்த வரையில் ஒரு எதிர்க்கட்சியின் வேட்பாளராக நான் அவரைப் பார்க்கவில்லை, தமிழகத்தில் ஏன் இந்தியா விலேயே இதுபோன்று ஒரு கடைந்தெடுத்த அயோக்கிய அரசியல்வாதியை நாம் இதுவரையில் பார்த்திருக்க முடியாது, இனிமேலும் பார்க்கவும் முடியாது. அதற்கு ஒரு உதாரணமாக இருக்கக்கூடியவரைத் தான் தேர்ந்தெடுத்து இன்றைக்கு நம்மை எதிர்க்கிற வேட்பாளராக நிறுத்தி வைத்திருக்கின்றார்கள்.

நான் எதற்காக இதைச் சொல்லுகிறேன் என்று சொன்னால், தமிழ்ச் சமுதாயத்தின் நல்லிணக்கத்தை, நிம்மதியை கெடுக்கக்கூடிய வகையில் பேசுவது, வாய்க்கு வந்தபடியெல்லாம் உளறுவது, கலவரத்தை நடத்துவதற்கு தூண்டுவது, கலவரத்தை நடத்துவது, பொய்களே பேசிக் கொண்டிருப்பது, அவதூறு மட்டும் பேசிக் கொண்டிருப்பது தான் எச்.ராஜாவின் தொழிலாகவே இருந்து கொண்டிருக்கின்றது.பாரதிய ஜனதா கட்சியில் இருக்கக்கூடிய அனைவரையும் நான் சொல்ல மாட்டேன், அவர்களுடைய கொள்கையில் எனக்கு உடன்பாடு இல்லாமல் இருக்கலாம்.

அவர்கள் சொல்வதை நாங்கள் விமர்சிக்கலாம், அதுபோல் நாங்கள் சொல்வதை அவர்கள் விமர்சிக்கலாம், அது வேறு. அது அரசியல் பண்பாடு. அரசியல்ரீதியாக - தத்துவ ரீதியாக - கொள்கை ரீதியாக - விமர்சிப்பது என்பது ஜனநாயகத்தின் உரிமை. ஆனால், கொச்சைப் படுத்தி கலவரம் தூண்டுவதில், அசிங்கத்தை ஏற்படுத்தக்கூடிய நிலையில் இருக்கக் கூடியவர்தான் எச்.ராஜா அவர்கள்.நான் கேட்க விரும்புவது, இப்படிப்பட்ட ஒருவர் நாடாளுமன்றத்திற்கு போனால், அது நாடாளுமன்றத்துக்கே அவமானம் என்பதை நீங்கள் மறந்துவிடக் கூடாது.

நாடாளுமன்றத்திற்குச் சென்றும் இதுபோன்ற நடவடிக்கைகளில் தான் ஈடுபட்டுக் கொண்டிருப்பார் என்று சொன்னால், அங்கு இருக்கக்கூடியவர்கள் என்ன சொல்வார்கள்? இவர் எந்த தொகுதியில் இருந்து வந்திருக்கின்றார்? என்ற ஒரு கேள்வி வருகின்ற பொழுது, சிவகங்கை தொகுதியில் இருந்து வந்திருக்கின்றார் என்று சொன்னால், இந்த சிவகங்கை தொகுதியில் இருக்கக்கூடிய உங்களுக்கு ஏற்படக்கூடிய அவமானம் என்பதை நீங்கள் மறந்துவிடக் கூடாது.

தந்தை பெரியாரை கொச்சைப்படுத்தி பேசுகின்ற, ஏன், தந்தை பெரியாரின் சிலைகள் அனைத்தையும் உடைப்பேன் என்று சொல்லுகின்ற, அறிஞர் அண்ணாவை கொச்சைப்படுத்தி பேசுகின்ற நம்முடைய திராவிட இயக்கத்தை இழிவுபடுத்தி பேசுகின்ற எச்.ராஜாவிற்கு, இந்தத் தேர்தலில் ஒரு மிகப்பெரிய பாடத்தை நீங்கள் புகட்டிட வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

## ஈரோடு மரவபாளையத்தில் கழகப் பயிற்சி வகுப்பு

திராவிடர் விடுதலைக் கழகம் ஈரோடு தெற்கு மாவட்டத்தின் சார்பாக , மரவபாளையம் சி.எஸ்.ஐ. தொடக்கப் பள்ளியில் 10.03.2019 ஞாயிறு அன்று சமூகநீதிப் போரில் பெரியாரும் அம்பேத்கரும் என்னும் தலைப்பில் பயிற்சி வகுப்பு நடைபெற்றது.

காலை 11 மணிக்கு வகுப்பு துவங்கியது தோழர்களின் அறிமுகத்தை தொடர்ந்து , முதல் அமர்வாக பரப்புரைச் செயலாளர் பால்.பிரபாகரன் “சமூகநீதிப் போரில் பெரியார்” என்னும் தலைப்பில் நெடிய வரலாற்று தரவுகளுடன் வகுப்பெடுத்தார். மதியம் 3 மணிக்கு வளைதளப் பொறுப்பாளர் விஜய் கழகத்தின் வளைதளப் பக்கங்களைப் பற்றியும் Twitter பற்றியும் வகுப்பெடுத்தார்.

அதைத் தொடர்ந்து , இரண்டாம் அமர்வாக கழகத் தலைவர் கொளத்தூர்மணி “சமூகநீதிப் போரில் அம்பேத்கர்” என்ற தலைப்பில் மாலை 7 மணிவரை வகுப்பெடுத்தார். இறுதியாக கழகத்தின் பெயர்ப் பலகையை கழகத் தலைவர் திறந்து வைத்தார். இப்பயிற்சி வகுப்பில் 40 தோழர்கள் பங்கு பெற்றனர். மாநகரத் தலைவர் ப.குமார் , சிவானந்தம் இருவரும் சிறப்பாக நிகழ்ச்சி ஏற்பாடுகளை செய்திருந்தனர்

## விழுப்புரத்தில் பழங்குடி மக்கள் பாதுகாப்பு மாநாடு

23.2.2019 அன்று மாலை விழுப்புரம் புதிய பேருந்து நிலையத்தின் அருகில் பேராசிரியர் கல்யாணி ஒருங்கிணைப்பில் நடந்த பழங்குடி மக்கள் பாதுகாப்பு மாநாட்டில் முன்னாள் அமைச்சர் க.பொன்முடி உரைக்குப் பின் திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பழங்குடி மக்கள் மீது அரசும் காவல்துறையும் எப்படி நடந்து கொள்கிறது என்பதை விளக்கி சிறப்புரையாற்றினார். நிறைவுரையாக விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன் பேசினார். முன்னாள் அமைச்சர் பேராசிரியர் க. பொன்முடி, சமூக சமத்துவப் படை தலைவர் ப. சிவகாமி, அய்.ஏ.எஸ்., மனித நேய மக்கள் கட்சி ப. அப்துல் சமது, த.நா. மலைவாழ் மக்கள் சங்கத் தலைவர் டில்லி பாபு ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

மாநாட்டில் தலைமை செயற்குழு உறுப்பினர் அய்யனார், விழுப்புரம் மாவட்டத் தலைவர் பூ.ஆ. இளையரசன், மாவட்டச் செயலாளர் பெரியார் சாக்ரட்டீஸ், கடலூர் மாவட்டச் செயலாளர் பாரதிதாசன், அரியலூர் மாவட்ட அமைப்பாளர் இராவண கோபால், திண்டிவனம் நகர கழகம் சிந்தனை சிற்பி மற்றும் தோழர்கள் மூர்த்தி, வில்லாளன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# மோடியின் 'பொய்'கள்

மோடி பேசி வரும் பொய்களின் ஒரு தொகுப்பு, இது.

**அறிவியல் – மோடி**

ஒரு நாட்டின் மக்களை எப்படியெல்லாம் வழி நடத்த வேண்டும் என்று பல தலைவர்களின் பட்டியலைக் கொடுக்கலாம். ஆனால் எப்படி வழி நடத்தக் கூடாது என்று கேட்டால் தயங்காமல் மோடியின் பெயரைப் பரிந்துரைக்கலாம்.

நாட்டின் அறிவியலாளர்கள், மருத்துவர்கள் அடங்கிய அவையில் மோடி பேசியது, "மகாபாரதத்தில் கர்ணன் தாயின் வயிற்றிலிருந்து பிறக்கவில்லை. இதற்குக் காரணம், அன்றைய காலக்கட்டத்திலேயே மரபணு அறிவியல் இருந்ததால் தான் இது நடந்திருக்கிறது. விநாயகரின் தலையைப் பாருங்கள், யானையின் தலை பொருத்தப் பட்டிருக்கிறது. அன்றே பிளாஸ்டிக் சர்ஜரி இருந்ததால் தான் இது நடந்திருக்கிறது" என்றார்.

அறிவியல் பாதையில் உலகம் விண்வெளியில் வீடு அமைக்கும் அளவுக்கு முன்னேறிக் கொண்டிருக்கும் காலத்தில் மத நம்பிக்கைகளை உட்புகுத்தி கிஞ்சிற்றும் அறிவுக்கு உட்படாத நிகழ்வுகளை அறிவாளர்கள் கலந்து கொள்ளும் நிகழ்வில் பேசுகிறார். தன் அரசியலுக்கு கர்ணனையும், விநாயகரையும்கூட விட்டு விட்டு வைக்கவில்லை மோடி. (தி கார்டியன் 28.10.14)

**மோடியின் திருமணம்**

நரேந்திர மோடி முதலமைச்சராக இருந்த காலக்கட்டத்தில் 2002-2012 வரை நடந்த தேர்தல்களில் தான் திருமணமானவரா, இல்லை திருமணம் ஆகாதவரா என குறிப்பிடவே இல்லை. தேர்தலில் விண்ணப்பிக்க வேண்டிய ஆவணங்களில்கூட எதையும் குறிப்பிடாமல் மறைத்து வந்திருந்தார். ஆனால் 2014ஆம் ஆண்டு மக்களவை தேர்தலுக்கு போட்டியிடும்போது தான் தனக்கு திருமணம் ஆனதாகவும், யசோதா பென் என்பவர் தனது மனைவி எனவும் தன் மனுவில் குறிப்பிட்டிருந்தார். இது சர்ச்சையை உண்டாக்கிய பிறகே மோடிக்கு யசோதா பென் என்பவருடன் திருமணம் ஆனதும், 35 ஆண்டுகள் அவரை விட்டு தனியாக மோடி இருப்பதும் தெரிய வந்தது.

10 ஆண்டு காலம் முதலமைச்சராக இருந்தவர் தேர்தல் பிரமாணப் பத்திரத்தில் கூட இதை சொல்லாமல் மறைத்து விட்டார். 35 ஆண்டு காலம் ஒரு பெண்ணை ஒதுக்கி வைத்து விட்டு விவாகரத்தும் வழங்காமல் தன் வீட்டுக்குள்ளேயே ஒரு பெண்ணின் வாழ்வையே கேலிக்குள்ளாக்கியிருக்கிறார். இவர் மேடைகளில் பெண்களின் உரிமை பற்றியும், பெண்ணின் பாதுகாப்பை பற்றியும் பேசுவது மோடியின் 'ஜும்லா' வித்தைகளில் ஒன்று. (தி இந்து 14.4.14)

**எளிய ஆடை உடுத்துபவன் – மோடி**

நாடாளுமன்ற தேர்தல் பிரச்சாரத்தின் போது ராகுல் காந்தியை, "அவர் செல்வச் செழிப்பில் பிறந்தவர். நான் இரயில் நிலைய மேடைகளில் டீ விற்று வளர்ந்தவன். அவர் பகட்டான ஆடைகளை உடுத்தி வளர்ந்தவர். ஆனால் நான் அப்படி இல்லை" என்று தன்னைப் பற்றி பெருமையாகப் பேசினார். ஆனால், மோடி பிரதமரானதும் ரூ.10 இலட்சம் செலவில் கோட் போட்டுக் கொண்டு ஊர் சுற்றினார். (தி இந்து 5.9.15)

**2016 – ஒரே தரம் ஒரே ஓய்வூதியம் இராணுவத்தில் மோடியின் ஏமாற்று வேலை**

இராணுவத்தில் பணிபுரிபவர்களுக்கு ஓய்வூதியத்தில் மாற்றம் கொண்டு வரப் பட்டது. அதற்கு எதிர்ப்பு வலுத்த நிலையில் ஒரே ஓய்வூதியம் கொண்டு வருவதாக மோடி அரசு சொல்லியது. ஒரு கட்டத்தில் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு விட்டது. நடைமுறையில் இருக்கிறது என மோடி அறிவித்தார். ஆனால் உண்மை என்ன?

2014க்கு முன் பணிக்கு சேர்ந்தவர்களுக்குக் கொடுக்கப்படும் ஓய்வூதியத்தைவிட அதற்குப் பிறகு சேர்பவர்களுக்குக் கொடுக்கப்படும் ஓய்வூதியம் குறைவு. ஆனால் மோடி அரசு இதனை மாற்றி விட்டதாக கூறுகிறது. ஆனால், 2014க்குப் பிறகு பணியில் இருக்கும் போது மரணம் அடைந்த வீரர்களின் குடும்பத்திற்கு முன்னால் கொடுக்கப்பட்ட ஓய்வூதியத் தொகையைவிட குறைவான தொகைதான் கொடுக்கப்பட்டு வருகிறது.



இந்த நிலையில் இதுவரை எவ்வளவு பணம் பட்டுவாடா செய்யப்பட்டிருக்கிறது என தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் கேட்டபோது நிர்வாகம், இதுவரை தர வரிசையில் வேலையின் கால அளவு உள்பட எதையும் முறைப்படுத்தவில்லை என்று பதில் வந்தது. இது எதையும் செய்யாமல் மோடி இது நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டு பயனடைந்து வருகிறார்கள் எனப் பேசி வருகிறார். இதில் நாட்டின் இராணுவத்திற்கு மரியாதை தர வேண்டும் என்று மட்டும் மேடைகளில் பேசி விட்டு அவர்களின் நலன் சார்ந்த விடயங்களில் எதையும் செய்யாமல் பொய் பேசி வருகிறார். (தி வயர் 4.11.16)

**2017 – 1.25 இலட்சம் கருப்புப் பணம் – பறிமுதல் மோடியின் பொய்**

பண மதிப்பிழப்பு நடவடிக்கை மூலம் கிட்டத்தட்ட 1.25 இலட்சம் கோடி பணம் பறிமுதல் செய்யப்பட்டிருக்கிறது என்று மோடி தனது பிரச்சாரப் பேரணியில் பேசினார். ஆனால் உண்மை?

1.35 இலட்சம் கோடி கணக்கில் கொண்டு வரப்படாத பணம் கண்டுபிடிக்கப்பட்டது உண்மை. ஆனால் அந்த பணம் மாநில அரசுக்கு வரவேயில்லை. பறிமுதல் செய்யப் படவுமில்லை. அதிகபட்சமாக கண்டு பிடிக்கப்பட்ட பணத்திற்கு உரிய வரியும், அபராதம் மட்டுமே பெறப்பட்டது. இதன் மூலம் எந்தவொரு பணமுதலைகளும் பாதிக்கப்படவில்லை. (ஸ்க்ரால் 15.8.17)

**வரி ஏய்ப்பு செய்த நிறுவனங்களின் உரிமை ரத்து – மோடியின் பொய்**

மோடி தனது பிரச்சார உரையில், இதுவரை அரசால் கண்டுபிடிக்கப்பட்ட வரி ஏய்ப்பு செய்த 1,62,618 நிறுவனங்களின் உரிமைகள் இரத்து செய்திருப்பதாக கூறினார். ஆனால் உண்மை நிலவரம்?

வரி அமலாக்கத்துறை கடந்த மூன்று ஆண்டுகளில் மொத்தமாகவே வெறும் 1155 நிறுவனங்கள் மட்டும் தான் வரி ஏய்ப்பு செய்வதை கண்டுபிடித்திருப்பதாக அறிக்கை தருகிறது. ஆனால் மோடி தன் கீழுள்ள அமைச்சகத்துக்கு மாறாக ஒரு எண்ணிக்கையைச் சொல்லி இரத்து செய்யப் பட்டதாக பொய் சொல்கிறார். (ஸ்க்ரால் 15.8.17)

**பெண்கள் பாஸ்போர்ட் பெயர் மாற்றுதல் – மோடியின் பொய்**

திருமணத்திற்குப் பிறகு இனி பெண்கள் தங்கள் பெயரை பாஸ்போர்ட்டுகளில் மாற்றத் தேவையில்லை என்று ஏதோ புதிய சட்ட திருத்தத்தைக் கொண்டு வந்துவிட்டது போலவும், பெண்களை அடிமை முறையி லிருந்து மீட்பதற்கு ஒரு சட்டம் கொண்டு வந்துவிட்டது போலவும் பெருமையாகப் பேசினார். ஆனால் உண்மை?

பெண்கள் திருமணத்திற்குப் பிறகு பாஸ்போர்ட்டில் கணவர் பெயர் சேர்க்கும் முறை காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலிருந்தே நடைமுறையில் இல்லை. ஏற்கனவே செயல்பாட்டில் இருந்த ஒரு சட்டத்தைத் தான் அறிமுகப்படுத்தியதுபோல பொய் பேசுகிறார் மோடி.

**ரம்ஜான் VS தீபாவளி – மோடி அரசியல்**

உத்திரபிரதேச மாநில சட்டமன்றத் தேர்தல் பிரச்சாரத்தில் பங்குகொண்ட மோடி; மாநில அரசு "ரம்ஜானுக்கு என்றால் அதிக மின்சாரத்தை வழங்குகிறது. ஆனால் அதுவே தீபாவளி என்றால் மின்சாரத்தை குறைத்து கொள்கிறது. முஸ்லிம்கள் என்றால் ஒன்று, இந்துக்கள் என்றால் ஒன்றா?" என்று மதங்களுக்குள் கலவரத்தை மேற்கொள்ள பொய் பேசி சென்று விட்டார். ஆனால் உண்மை நிலை வேறு.

ஜூலை 8ஆம் தேதி கொண்டாடப்பட்ட ரம்ஜானுக்கு உ.பி. அரசாங்கம் வழங்கிய மின்சாரம் 13,500 மெகாவாட். அதுவே தீபாவளி 28 அக்டோபரிலிருந்து 1 நவம்பர் வரை கொண்டாடப்பட்டது. 28 அக்டோபர் தொடங்கி 5 நாட்களிலும், ஒவ்வொரு நாளிலும் 15400 மெகாவாட் மின்சாரம் வழங்கப்பட்டது. ரம்ஜான் தினத்தைவிட 2000 மெகாவாட் அதிகமாக மட்டுமல்ல 5 நாட்களுக்கு தொடர்ந்து வழங்கப்பட்டது.

ஆனால் பிரதமர் மோடி, இப்படியான 'பொய்களை' கொண்டு மக்களை உணர்ச்சி பெறச் செய்து உ.பியிலும் வெற்றி பெற்றார். இப்போது அங்கு யோகி ஆதித்யநாத் தலைமையில் அடாவடி ஆட்சி நடந்து வருகிறது.

**உ.பி. வன்முறையில் முதலிடம் – மோடியின் பொய்**

பிப்ரவரி 5 ஆம் தேதி உ.பி.யில் நடந்த தேர்தல் பிரச்சாரத்தில்; அகிலேஷ் யாதவ் ஆட்சி செய்யும் உ.பி. அரசு தான் நாட்டின் வன்முறை நடக்கும் இடங்களில் முதலாவதாக இருக்கிறது. பா.ஜ.க. ஆளும் மாநிலங்களைப் பாருங்கள் என பெருமையாகப் பேசினார்.

ஆனால் உண்மை என்ன? உ.பி. மாநிலத்தை விட இந்தியாவின் 27 மாநிலங்களில் வன்முறை விகிதம் அதிகமாக இருக்கிறது என்றே புள்ளி விவரம் சொல்கிறது. உத்திரபிரதேசத்தைவிட மிக அதிகமாக வன்முறை நிகழும் மாநிலங்களாக பா.ஜ.க. ஆட்சி செய்யும் மாநிலங்கள் இருக்கின்றன.

மோடி சொன்னது - உத்தரபிரதேசத்தில் 24 கற்பழிப்புகள், 21 கற்பழிப்புக்கான முயற்சிகள், 13 கொலைகள், 19 கலவரங்கள், 136 திருட்டுகள் ஒவ்வொரு நாளும் நடக்கிறது. இந்தியாவில் வன்முறையில் முதலிடத்தில் உ.பி. இருக்கிறது. இதுதான் அகிலேஷ் யாதவ் அரசின் சாதனை என்றார். (அகிலேஷ் முதல்வராக இருந்த போது பேசிய பேச்சுகள்)

உண்மை நிலை - மோடி சொன்ன புள்ளி விவரமே தவறானது. இந்த எண்ணிக்கையில் நான்கில் ஒரு பங்கே உ.பியில் நடக்கிறது. உ.பி. இந்த வன்முறை சம்பவங்களில் முதல் மாநிலமாக இல்லை. உ.பி.யை விட இந்தியாவின் 27 மாநிலங்களில் அதிகமான வன்முறைகள் நடக்கிறது என்பதே NCRB (National Crime Record Bureau) சொல்லக் கூடிய புள்ளி விவரம். (ஸ்க்ரால் 17.2.17)

அகிலேஷ் யாதவ் ஆட்சி செய்யும் உ.பி.யில் பா.ஜ.க.வின் தேசியத் தலைவர் அமித்ஷா பேசியது: உத்திரபிரதேசத்தைவிட பா.ஜ.க. ஆட்சி செய்யும் 14 மாநிலங்களில் சட்ட ஒழுங்கு சீராக இருக்கிறது.

உண்மை என்ன? பா.ஜ.க. ஆட்சி செய்யும் 13 மாநிலங்களில் 2015 புள்ளி விவரப்படி, வன்முறையில் 6 மாநிலங்கள் அதிக விகிதத்திலும், கற்பழிப்புகளில் 12 மாநிலங்கள் அதிக விகிதத்திலும், 9 மாநிலங்கள் கடத்தல், 5 மாநிலங்கள் கலவரம், எட்டு மாநிலங்கள் திருட்டிலும் உ.பி.யைவிட அதிகமாக இருக்கின்றது. இந்த நிலையில் மோடியும் அவரது சகாக்களும் கவலை கொள்ளாமல் பொய் பேசுகிறார்கள். (ஸ்க்ரால் 14.2.17)

(பொய்ப் பட்டியல் தொடரும்)

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/19-21 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2019-2021
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# சாமியார் ராம்தேவ் தலைமையில் குருகுலக் கல்வி ஆணையமாம்!

இந்துத்துவ அமைப்புகள் தற்போதைய கல்விமுறை ஆங்கிலேயர்களால் கொண்டுவரப்பட்டது என்றும், இதனை நீக்கிவிட்டு மீண்டும் பழைய குருகுல முறைக் கல்வியை கொண்டுவரவேண்டுமென்றும் நீண்டகாலமாக வலியுறுத்தி வருகின்றன. தற்போது இவர்களின் கோரிக்கை செயல்வடிவம் பெறத்துவங்கியுள்ளது, குருகுலக் கல்விக்காக புதிய ஆணையம் உருவாக்கப்பட்டு அதன் தலைவராக சாமியார் ராம்தேவ் அமர வைக்கப்பட்டுள்ளார். ஆங்கிலேயர் வருகைக்கும் முன்பு பார்ப்பனர் மட்டுமே கல்வி கற்கும் நிலை இருந்தது.

சூத்திரர்கள் உள்ளிட்டோர் அங்கு கல்வி கற்க அனுமதியில்லை. இதனால் பல நூற்றாண்டுகளாக இந்தியா இருண்ட காலத்தில் இருந்து வந்தது. 1700-களில் ஆங்கிலேயர்கள் இந்தியாவிற்கு வருகை தந்த பிறகு சீரழிந்து கிடந்த சமுகத்தை கல்வியின் மூலம் மேம்படுத்த முயலும் நோக்கத்தில், மதத்தின் பரப்புரையின் மூலமாக மிசனரிப்பள்ளிகள் நாடு முழுவதும் துவங்கப்பட்டன.

முக்கியமாக தென் இந்தியாவில் அதிகமாக துவங்கப்பட்டன. இதன் விளைவாக 1800களுக்குப் பிறகு இந்தியாவின் எழுத்தறிவு 5 விழுக்காடாக உயர்ந்தது, இதனைத் தொடர்ந்து 1900-களின் துவக்கத்தில் 13 விழுக்காடாக கூடியது, பள்ளி மற்றும் கல்லூரிகளின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்தன. அதே நேரத்தில் மற்றொருபுறம் குரு குலக் கல்விமுறை சீந்துவார் யாருமின்றி கிடந்தது, இதனை அடுத்து பல குரு குலங்கள் ஆங்கிலேயக் கல்வி முறையை ஏற்றுக் கொண்ட காரணத்தால் குருகுலக்கல்வி முறை முடிவிற்கு வந்தது.

குருகுலக்கல்வி முறை முடிவிற்கு வந்த பிறகுதான் அனைவருக்குமான கல்வி என்பது சாத்தியமானது, இருப்பினும் குருகுலக்கல்வி என்ற பெயரில் பொதுக் கல்வியிலும் ஆங்காங்கே பாகுபாடுகளைக் காண முடிந்தது. தந்தை பெரியார் காங்கிரசை விட்டு வெளியே வந்ததில் முக்கிய காரணமாக இருந்தவற்றில் ஒன்று சேரன்மாதேவி குருகுலத்தில் நடந்த ஜாதியக் கண்ணோட்டம் தான். சுதந்திரத்திற்குப் பிறகு சில மடங்கள் குருகுலக்கல்வி என்ற பெயரில் ஆரம்பித்தனர்.

ஆனால் அங்குவாழ்க்கை முன்னேற்றத்திற்கான கல்வியில்லாத நிலையில், பார்ப்பனர்கள்கூட அதை ஆதரிக்கவில்லை, 1950-களுக்குப் பிறகு மீண்டும் ஆர்.எஸ்.எஸ். அமைப்பு கல்வி நிறுவனங்களைத் திறந்து நடைமுறைக்கல்வியுடன் மெல்ல மெல்ல மதவாதத்தையும் திணித்து வந்தது, 'இந்து வித்யாலயா' என்ற பெயரில் நாடுமுழுவதும் அதன் கிளைகள் திறக்கப்பட்டன. இருப்பினும் பழைய குருகுலக்கல்வி முறைக்கு மக்களை இழுக்க முடிய வில்லை.

இந்த நிலையில் 2014ஆம் ஆண்டு பாஜக ஆட்சிக்கு வந்த பிறகு கல்வியில் சீர்திருத்தம் என்ற பெயரில் இந்துத்துவ அமைப்புகளின் ஆலோசனைகளை ஏற்று, கல்விமுறையில் வெகுஜன மக்களின் எதிர்ப்பிற்கும் இடையில் மெல்ல மெல்ல மதவாதத்தைத் திணித்து வந்தது. தற்போது நேரடியாக மீண்டும் குருகுலக் கல்விமுறையை அறிமுகப்படுத்த மனித வளத்துறைத் ஆணையம் ஒன்றை உருவாக்கியுள்ளது, இந்த ஆணையத்திற்குத் தலைவராக சாமியார் ராம்தேவை நியமித்து உள்ளனர். (இவர்மீது வருமான வரித்துறையில் வழக்குகள் உள்ளன) இந்த ஆணையம் குருகுலக்கல்விக்கான பாடத்திட்டங்கள், தேர்வுகள், சான்றிதழ்கள் ஆகியவற்றைத் தயார் செய்து வருகிறது.

வேதக் கல்வியைப் போதிக்கும் மகிரிஷி சத்திபனி ராஷ்டிரிய வேதவித்யா பிரதிஷ்தன் என்ற எம்.எஸ்.ஆர்.வி.பி. மனித வள மேம்பாட்டுத் துறையின் கீழ் செயல்பட்டு வருகிறது. பதஞ்சலி நிறுவனத்தின் யோகப்பீட தொண்டு அமைப்பு உட்பட மூன்று தனியார் நிறுவனங்கள் இந்தப் பதவிக்கான தங்களின் விருப்ப மனுக்களை அளித்தன. யோகபீடம் மற்றும் ரீதானந்தா பாலவேத கல்வி அறக்கட்டளை மற்றும் புனேவை மய்யமாக கொண்டு இயங்கி வரும் மகாராட்டிரா இன்ஸ்டிடியூட் ஆஃப் டெக்னாலஜி உள்ளிட்ட இரண்டு நிறுவனங்களும் இந்த பட்டியலில் அடங்கும்.

இந்த மூன்று நிறுவனங்களும் தங்களின் அறிக்கையினை சமர்ப்பித்தன. நேசனல் புக் ட்ரஸ்ட்டின் இயக்குநர் கோவிந்த் பிரசாத் ஷர்மா முன்னிலையில் யோகபீடத்திற்கான அறிக்கையை பதஞ்சலி நிறுவனத்தின் இயக்குநராக உள்ள பால்கிருஷ்ணா சமர்ப்பித்தார். இவர் ராம்தேவின் சகோதரர் ஆவார். "வேதக் கல்வி முறையின் மூலம் இந்தியாவின் பாரம்பரியம் பற்றிய அறிவினை நிலை நிறுத்த வேண்டும். வேதம், சமஸ்கிருதம், சாஸ்திரம், மற்றும் தரிசனம் ஆகியவற்றை இந்த கல்வி மூலம் மாணவர்களுக்கு அறிமுகம் செய்ய உள்ளோம். இதற்கும் பாடத்திட்டங்கள், தேர்வுகள், சான்றிதழ்கள் ஆகியவற்றைத் தயாரித்து வருகின்றோம்" என்று அவர் கூறி யுள்ளார். இவை எல்லாம் எதைக் காட்டுகின்றன?

**பா.ஜ.க. ஆட்சி என்பது பார்ப்பன ஆட்சி - வருணாசிரம நோக்கத்தைக் கொண்டது - மீண்டும் பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தால், மீண்டும் குலக்கல்விதான் எச்சரிக்கை!**

# நினைவிருக்கிறதா? திராவிடக் கட்சிகளை வீழ்த்த யாகம் நடத்திய பா.ஜ.க.

'கழகங்கள் இல்லாத தமிழகம்' என்று ஊர்தோறும் சுவர்களில் எழுதி, திராவிடக் கட்சிகளை ஒழிப்போம் என்று சூளுரைத்த பா.ஜ.க. தான் இப்போது அ.இ.அ.தி.மு.க. கூட்டணியில் 5 இடங்களைப் பெற்றுக் கொண்டு மீண்டும் எடப்பாடி நல்லாட்சியையும் 'தேசபக்த' மோடி ஆட்சியையும் கொண்டு வருவோம் என்று பேசி வருகிறது.

2018 ஜனவரி 26, 27, 28 தேதிகளில் தமிழ்நாட்டில் திராவிடக் கட்சிகளை ஒழித்து இந்து சாம்ராஜ்யம் அமைக்க பல கோடி ரூபாய் செலவில் பார்ப்பன புரோகிதர்களை வைத்து யாகம் நடத்தியது பா.ஜ.க. ஈரோடு மாவட்டம் திண்டல் அருகே உள்ள ஏ.பி.டி. பள்ளி வளாகத்தில் இரண்டரை ஏக்கர் நிலத்தில் தகரப் பந்தல் அமைத்து சுமார் 2 கோடி ரூபாய் செலவில் 300 பார்ப்பனப் புரோகிதர்கள் வேதம் ஒத நடத்தப்பட்டது அந்த யாகம்.

இராமாயணத்தில் - இராமன் செய்த யாகத்துக்குப் பிறகு நடந்த மிகப் பெரும் யாகம் இதுதான் என்றார்கள், யாகம் நடத்திய பா.ஜ.க.வினர், காஞ்சி இளைய சங்கராச்சாரி விஜயேந்திரன் தலைமையில் இலட்சுமி மகா யாகம்! (அவர், தமிழ்த்தாய் வாழ்த்துக்கு எழுந்து நிற்க மறுத்ததால் உருவான எதிர்ப்பு காரணமாக பயந்துபோய் நிகழ்ச்சிக்கு வரவில்லை) இரண்டாம் நாள் - வேலூர் பொற்கோயில் சக்தி அம்மா தலைமையிலும், மூன்றாம் நாள் - ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் என்ற ஆன்மிக வியாபாரப் பார்ப்பனர் தலைமையில் அஸ்வமேத ராஜ சூய யாகமும் நடந்தது.

யாகத்தில் பா.ஜ.க. தமிழக விவசாய அணியின் பொதுச் செயலாளர் கோவிந்த ராஜு, மத்திய அமைச்சர் பொன் இராதாகிருஷ்ணன் உள்ளிட்ட பலரும் பங்கேற்றனராம். "தமிழகத்தில் திராவிடக் கட்சிகளை வீழ்த்தி இராஜ்யத்தைப் பிடிக்க **கட்சித் தலைமையின் ஆலோசனைப்படி** இந்த யாகத்தை நடத்தினோம். விரைவில் பி.ஜே.பி. தமிழகத்தில் ஆட்சியைப் பிடிக்கும்" என்று ஈரோட்டில் உள்ள பா.ஜ.க.வினர் கூறினார்கள். (செய்திக்கு ஆதாரம்: ஜூனியர் விகடன் 7.2.2018) யாக பூஜையில் பா.ஜ.க. தலைவர்களோடு பங்கேற்கும் படத்தையும் ஜூனியர் விகடன் வெளியிட்டது.

தமிழகத்தில் திராவிடக் கட்சிகளை வீழ்த்த பார்ப்பனர்களை வைத்து யாகம் நடத்திய பா.ஜ.க. தான் இப்போது அ.இ.அ.தி.மு.க.வுடன் கூட்டணி போட்டுக் கொண்டு ஓட்டுக் கேட்டு வருகிறது. கழகங்கள் இல்லாத தமிழகம் என்ற முழக்கம் எங்கே போனது? அதையும் யாக நெருப்பில் போட்டு எரித்து விட்டீர்களா?

இப்போது சிவகங்கையில் போட்டியிடும் பா.ஜ.க. பார்ப்பனர் எச். ராஜா, நாகையில் ஒரு கோயிலில் தனது குடும்பத்துடன் 'சத்ரு சம்ஹார யாகம்' நடத்தியிருக்கிறார். எதிரிகளை அழிப்பதற்கான இந்த யாகத்தை தனது உள்ளூர் கட்சிக்காரர்களுக்கே தெரியாமல் நடத்தியிருக்கிறார். 'சூத்திரர்'களை எப்படி யாகத்துக்கு அழைப்பார்?

யாகத்துக்கு சக்தி இருந்தால் தமிழக 'இராஜ்யம்' தானாக உங்களது காலடியில் வந்து சேர வேண்டுமே? பிறகு ஏன் 'கால்கடுக்கக்' கூட்டணிக் கதவு வாசலில் தவம் கிடந்தீர்கள்?



கோவையில் 23.03.2019 அன்று ஃபாருக் இரண்டாம் ஆண்டு நினைவு நாள் கருத்தரங்கில் கோமதி-இராவண கோபால் இணையருடன் ஃபாருக் குடும்பத்தினர்

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 4th April 2019

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN